# 18 ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிமுறைகள்

**ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும்**
**காதலர் இருவர் கருத்தொருமித்து -ஆதரவு**
**பட்டதே இன்பம் பரனை நினைத்து இம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு**

- ஔவையார்

இறைவன் அருளால் பிறவி எடுத்த உயிரானது உலக போகங்களில் திளைத்து, அனுபவித்து இறுதியில் பரம்பொருளாகிய இறைவனின் பாதத்திற்குச் செல்வதே வீடுபேறாகும். சைவநெறி வீடுபேற்றை அடைவதையே இறுதி இலட்சியமாகக் குறிப்பிடுகிறது. ஆன்மாக்கள், மும்மலங்களினின்று விடுபடுவதன் மூலம் வீடுபேற்றை எய்தலாம். வீடுபேறானது முத்தி, ஆன்ம ஈடேற்றம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும். வீடுபேற்றுக்கான வழிகளாக தீட்சை, சைவ நாற்பாதங்கள், குருஇலிங்க சங்கம வழிபாடுகள் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் தீட்சை, சைவநாற்பாதங்கள் என்பன பற்றி வருமாறு படிப்போம்.

## 1. தீட்சை

குரு மூர்த்தியானவர்கள் தம் சீடர்களுக்குத் தவத்தையும் ஞானத்தையும் அளிக்கும் முறையே தீட்சை எனச் சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது. “அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தைத் தருவது” **தீட்சை** என்று பொருள்படும். “தீட்சை” என்பது “தீஷா” எனும் வடமொழிச் சொல்லில் இருந்து மருவியது.(தீ – தருதல் , ஷா – நீக்குதல்) ஒருவர் தீட்சையைப் பெறுவதன் மூலம் சைவசமயத்தில் பிரவேசிப்பதற்கும் அதன் வெவ்வேறு படிநிலைகளில் புகுவதற்கும் தகுதி வாய்ந்தவராகக் காணப்படுவார்.

## அ. தீட்சை அளிக்கும் சிவாசாரியாரின் தகைமைகள்



சைவ மக்கள் சைவ சமய ஆசாரங்களை அனுஷ்ட்டிப்பதற்கு வேண்டிய தகுதியை அளிப்பது தீட்சை ஆகும். அத் தீட்சையை அளிக்கின்ற சிவாச்சாரியார் மேல்வரும்நான்கு தகுதிகளைக்கொண்டவராக இருக்க வேண்டும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. அவையாவன

1. சமய தீட்சை
2. விசேட தீட்சை
3. நிர்வாண தீட்சை
4. ஆச்சாரிய அபிடேகம்

என்பனவாகும்.

## 1. சமய தீட்சை

சைவசமயியாகும் உரிமையைத் தருவது **சமய தீட்சை** எனப்படுகிறது. சமய தீட்சை பெற்றவன் "சமயி" எனப்பெயர் பெறுகிறான். சமய தீட்சை பெறுவதால் சிவனின் சிறப்பு மூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தை (சிவாயநம எனும் பஞ்சாட்சரத்தை) ஸ்தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும், சிவாகமங்களை ஓதி உணரும் உரிமையும், அவ்வாகமங்கள் கூறும் சரியாபாதத்தில் நிற்கும் உரிமையும் கிட்டும். இதன் மூலம் சிவனின் முதன்மையை ஒருவாறு உணரும் நிலை உண்டாகும்.

## 2. விசேட தீட்சை

சிவலிங்க பூசை செய்வதற்கான தகுதியளிப்பது **விசேட தீட்சை** எனப்படும். சமய தீட்சை பெற்று அதன் வழி நிற்கும் போது ஆணவமலம் வலுவிழக்க, சிவனைச் சிவலிங்க வடிவிற் கண்டு வழிபடுதலாகிய கிரியைநெறியில் விருப்பு உண்டாக, முன்னர் சமய தீட்சையைப் பெற்றவரிடமோ அல்லது வேறொரு ஆசாரியாரிடமோ விசேட தீட்சை பெறலாம். விசேட தீட்சையின் மூலம் சிவலிங்க மூர்த்திக்கு அகப்பூசை, புறப்பூசை செய்யும் முறைகளோடு யோக முறையையும் செய்யும் உரிமையைப் பெறலாம். விசேட தீட்சை பெற்றுக் கிரியா பாதத்தில் நிற்போர் "புத்திரர்" என்றும் யோக பாதத்தில் நிற்போர் "யோகியர்" என்றும் பெயர் பெறுவர்.

## 3. நிர்வாண தீட்சை

சமய தீட்சையும் விசேட தீட்சையும் பெற்றவர்கள் இறுதியாகப் பெறும் தீட்சை **நிர்வாண தீட்சை** எனப்படும். இதன் மூலம் பொய்யைப் பொய் எனக் கண்டு கழித்து மெய்யை மெய் என உணர்ந்து பற்றும் நிலை தானாக எய்யப் பெறும். அத்துவாக்களை அடக்கும் கலையும், முப்பொருள் உண்மையை உணரும் தன்மையும், உயிரை ஞான நிலைக்கு உய்யச் செய்யும் நிலையும் ஞானாசிரியனிடமிருந்து கிடைக்கும். நிர்வாண தீட்சை இரு வகைப்படும்.

I) **சத்தியோ நிர்வாண தீட்சை** – முற்றாகவே பற்றற்ற நிலையில் இருப்பவர்களுக்கு உடனே முத்திப் பேறு கிடைக்கும் வகையில் செய்யப்படுவது சத்தியோ நிர்வாண தீட்சை எனப்படும்.

**II)** **அசத்தியோ நிர்வாண தீட்சை** – ஆன்மாக்கள் பிரார்த்த வினைப்பயனை அனுபவித்து முடிந்த பின் அவை முத்திப்பேறு அடையும் வகையில் செய்யப்படுவது அசத்தியோ நிர்வாண தீட்சை எனப்படும்.

இவற்றுக்கு மேலாக அக்கினி காரியத்தால் செய்யப்படுவது **அங்கி தீட்சை** என்றும், அக்கினி இல்லாது செய்யப்படுவது **அங்க தீட்சை** என்றும் அழைக்கப்படும்.

### 4. ஆசாரிய அபிடேகம்

நிர்வாண தீட்சை பெற்ற ஒருவர் குருப்பட்டம் தரிப்பதற்காகச் செய்யப்படும் கிரியை **ஆசாரிய அபிடேகம்** எனப்படும். குருப்பட்டம் பெற்றோர் பிறருக்குத் தீட்சை கொடுக்கவும், பரார்த்த பூசை செய்யவும் தகுதியைப் பெறுவர். இவர் சிவாச்சாரியார் எனவும் அழைக்கப்படுவார். சிவாச்சாரியாருக்கு இருக்க வேண்டிய தகைமைகளைச் சிவாகமங்கள் மேல்வருமாறு கூறுகின்றன.

1. திருமணம் முடித்து இல்லறம் நடத்துபவராக இருத்தல்.
2. உடல், உளக் குற்றமற்றவராக இருத்தல்.
3. கல்வியறிவும் ஒழுக்க மேம்பாடும் மிக்கவராயிருத்தல்.
4. சைவ நாற்பாதங்களில் பயிற்சியுடையோராயிருத்தல்.
5. சீடர்களுக்குச் சிறந்த ஒழுக்கத்தையும் சைவப் பாரம்பரிய நெறிகளையும் போதிக்கக் கூடியவராயிருத்தல்.
6. பதினாறு தொடக்கம் எழுபது வயதிற்குட்பட்டோராயிருத்தல்.

## ஆ. தீட்சை வகைகள்

தீட்சை ஆதார தீட்சை, நிராதார தீட்சை என இருவகைப்படும் இறைவன் வேறோர் ஆதாரத்தையும் வேண்டாது தானே குருவாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்கள் மட்டும் உடைய பிரளயாகலருக்கு முத்தியளிக்கும் தீட்சை நிராதாரதீட்சை ஆகும்.

இறைவன் ஞானாசிரியர் ஒருவர் ஊடாக ஆணவம் கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடைய நம்போன்ற சகலருக்கும் அளிக்கும் தீட்சை ஆதாரதீட்சை எனப்படும்.

இவ் ஆதாரதீட்சையானது அளிக்கப்படும் முறைக்கேற்ப அவை **நயனம், பரிசம், வாசகம், மானசம், சாத்திரம், யோகம், ஔத்திரி** என ஏழுவகைப்படும். இத் தீட்சைகள் சிவாச்சாரியாரால் அளிக்கப்படும் முறைபற்றியும் அத்

தீட்சைகளை பெற்றுக் கொண்ட நமது சைவநாயன்மார்கள் பற்றியும் மேல்வருமாறு நோக்குவோம்

1. **நயன தீட்சை** – குரு அங்கநியாச, கரநியாசங்களால் தன்னைச் சிவமாகப் பாவித்து அப்பாவனையுடன் மாணாக்கனைக் கண்ணால் நோக்கி அவன் செய்த கருமங்களை அழித்தொழிப்பது நயன தீட்சை எனப்படும். சிவபெருமானிடம் திருத்தோணிபுரத்திலே திருஞான சம்பந்தர் பெற்றது நயன தீட்சையாகும்.

2. **பரிச தீட்சை** – குரு தன் வலக்கையைச் சிவன் கையாகப் பாவித்து மாணாக்கனது சென்னி மேல் வைத்து அவனைச் சிவமாகச் செய்தல் பரிச தீட்சையாகும். சுந்தர மூர்த்தி நாயனாருக்கு சிவபெருமான் திருவெண்ணெய் நல்லூரில் வழங்கிய தீட்சை பரிச தீட்சை ஆகும்.

3. **வாசக தீட்சை** – குரு மந்திரங்களைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறும், பொருந்துமாறும், மாணவனுக்கு உபதேசிப்பது வாசக தீட்சை எனப்படும். மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் உபதேசித்தமை வாசக தீட்சையாகும்.

4. **மானச தீட்சை** – குரு தன்னைச் சிவமாகப் பாவித்து அந்தப் பாவனையுடன் மாணாக்கனது ஆன்மாவை உடலினின்றும் பாவனையில் கொண்டு வந்து தனது ஆன்மாவிற் சேர்த்துச் சிவமானதாகப் பாவித்து மீள அவ்வான்மாவை அவனது உடலிற் சேர்த்தல் மானச தீட்சை எனப்படும்.திருநாவுகரசுநாயனாருக்கு சிவபெருமானுக்கு மானசதீட்சையும் தருவடிதீட்சையும்வழங்கப்பட்டமை

5. **சாத்திர தீட்சை** – குரு மாணவனுக்குச் சிவாகமங்களையும் திருமுறைகளையும் ஓதுவித்தல் சாத்திர தீட்சையாகும். மாணிக்கவாசகருக்கு சிவபெருமான் திருப்பெருந்துறையில் வைத்து பதி, பசு, பாச விளக்கம் வழங்கியமை இதற்கு உதாரணமாகும்.

6. **யோக தீட்சை** – குரு மாணாக்கனை சிவயோகம் பயிலச் செய்தல் யோக தீட்சை எனப்படும். தட்சணாமூர்த்தியாகிய சிவபெருமான் சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரராகிய நான்கு பேருக்கும், மெய்மை புரிய வைத்தமை யோக தீட்சையாகும்.

7. **ஔத்திரி தீட்சை** - பொதுவாகச் சைவ மக்களுக்குச் செய்யப்படுவது ஔத்திரி தீட்சை ஆகும் ஆன்மாக்களாகிய உயிர்கள் வீடுபேற்றை அடையும் பொருட்டு ஆசாரியாரால் அக்கினி காரியத்துடன் செய்யும் அங்கி தீட்சையே ஔத்திரி தீட்சை எனப்படும். இது ஞானவதி, கிரியாவதி எனும் இருவகைகளில் ஒருவகையாற் செய்யப்படல் வேண்டும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன.

குண்டம், மண்டலம், வேதிகை, நெய், சுருக்குச் சுருவம் முதலிய அனைத்தையும் மனதிற் கொண்டு, அகவழியாகச் செய்யும் கிரியைகள் ஞானவதி என்றும், இவ்வனைத்தையும் புறத்தே அமைத்துக் கொண்டு செய்யும் கிரியைகள் கிரியாவதி என்றும் அழைக்கப்படும். இது மந்திரங்களை ஓதி ஆச்சாரியாரால் செய்யப்படுவதால் மாந்திரி தீட்சை எனவும், அங்கங்களைப் பாவித்து ஆச்சாரியாரால் சீடனுக்கு வழங்கப்படுவதால் அங்க தீட்சை எனவும் அழைக்கப்படும்.

## இ. தீட்சை அளிக்கப்படும் முறை

**தீட்சை அளிக்கப்படும் படிமுறைகளைச் சிவாகமங்கள் மேல்வருமாறு கூறுகின்றன.**

1. **மண்டலம் அமைத்தல்** - தீட்சைக் கிரியைக்கான சரியான இடத்தை ஒழுங்கு செய்தல்.
2. **குண்டம் அமைத்தல்** - ஓமம் செய்யும் இடத்தை ஒழுங்கு செய்தல்.
3. **குரு தயாராதல்** - குரு தம் கடமைகளை நிறைவு செய்த பின்னர் உத்தரீயம், தலைப்பாகை, உருத்திராக்கம் என்பன அணிதல்.
4. **சிவோகம் பாவனை செய்தல்** - குரு தம்மைச் சிவனாகப் பாவித்து தீட்சை மண்டலத்தினுட் செல்லல்
5. **சுத்தி செய்தல்** - அஸ்த்திர மந்திரத்தால் தானசுத்தி செய்து துவாரபாலகருக்குப் பூசை செய்து மந்திர நீர் தெளிப்பதன் மூலம் சுத்தி செய்யப்படும். கும்பம் வைத்து மகாலஷ்மி, பிள்ளையார், அட்டதிக்குப் பாலகர், மண்டலேசுரர் ஆகியோருக்கு பூசை செய்தல்.
6. **கிரியைகளைச் செய்தல்** - தீட்சை பெறத் தயாராயுள்ள சீடரை முன்னிலைப் படுத்தி ஓமாக்கினி வளர்த்து விதிமுறையாக ஓமஞ் செய்தல்.
7. **நயன தீட்சைவழங்கல்** - குரு சீடனுக்கு தலை முதல் பாதம் வரை அருட்பார்வை செய்தலாகும்.

**8. ஸ்பரிச தீட்சைவழங்கல்** - குரு தம் வலக்கையை சீடனின் உச்சந்தலையில் வைத்தலாகும்.

**9. வாசக தீட்சைவழங்கல்** - சீடனின் தலையையும், தம் தலையையும் பட்டுத்துணியினால் போர்த்தி பிள்ளையார், சிவபெருமான், உமாதேவியார், முருகன் ஆகிய கடவுளர்களுக்கான மூல மந்திரங்களை உரைத்தலாகும்.
இவ்வாறு சமய தீட்சை பெற்ற சீடன் சைவ அநுட்டானம் செய்வதற்குத் தகுதியைப் பெறுகின்றான்.

## ஈ. சமய தீட்சை பெற்றவர்களுக்கான ஒழுக்கம்

சமய தீட்சை பெற்றவர்கள் விதிப்படி கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் அநுட்டானம் எனப்படும். இவ்வொழுக்கங்களிலே நீராடல், சந்தியாவந்தனம், செபம், தியானம், குருசேவை, சிவனடியார் சேவை,சரியைத் தொண்டு முதலியன அடங்கும். சந்தியாவந்தன வழிபாட்டில் நீராடல், சிறிதளவு தூய நீரை உட்கொள்ளலாகிய ஆசமம், மூச்சை உள்ளே இழுத்துச் சிறிது நேரம் நிறுத்தி வைத்து ஒழுங்கு முறைப் படி மூச்சிப்பயிற்சி செய்யவிடுதலாகிய பிராணாயாமம், மந்திர செபம், தியானம், போன்ற அநுட்டானங்கள் இடம் பெறும். இவ்வநுட்டானங்கள் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருப்பதற்கும் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கும் உதவுவன. சமய தீட்சை பெற்றவர்களுக்கு பஞ்சாட்சர மந்திர செபம் மிகவும் முக்கியமானது. மேலும் அநுட்டானம் செய்யும் போது விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்தல் வேண்டும்.

சமய தீட்சை பெற்றவர்கள் தம் பொது வாழ்க்கையிற் கொல்லாமை, கள்ளாமை, புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, மனத்தைரியம் மீதான விலகல் முதலான இயம ஒழுக்கங்களையும் தவம், இறை நம்பிக்கை, ஈகை, முதியோர் வணக்கம், செருக்கின்மை, மெய்ஞ்ஞானச் சிந்தனை, நன்மை தீமையறிதல் முதலான நியம ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல், பஞ்சதோத்திரம் ஓதுதல், புராண பாராயணம் செய்தல், ஆலயத்தொண்டு செய்தல், ஆலய வழிபாடு போன்ற நற்கருமங்களிலும் ஈடுபடல் வேண்டும். இத்தகைய ஒழுக்கங்களால் உலகப்பற்றைக் குறைத்து ஈற்றில் முத்திப்பேறு பெறுதல் எளிதாம்.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. தீட்சை எனும் சொல்லின் பொருளைத் தருக.
2. தீட்சையை வழங்கும் ஆச்சாரியார்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் எவை எனச்சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன?
3. தீட்சை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

4. தீட்சை வழங்கும் படிமுறைகளைச் சிவாகமங்கள் எவ்வாறு கூறுகின்றன?
5. சமய தீட்சை பெற்றுக் கொண்டவர் பின்பற்றவேண்டிய ஒழுக்கங்கள் யாவை?

**செயற்பாடு**

01. பாட ஆசிரியரின் துணையுடன் உங்கள் பிரதேசத்தில் தீட்சை வழங்கும் செயற்பாட்டினை ஏற்பாடு செய்க. அதனை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப் படுத்துக.

**பாடச்சுருக்கம்.**

- தீட்சை முத்திக்குரிய வழிவகைகளுள் ஒன்றாகும்.
- தீட்சை என்பது அஞ்ஞானத்தைக் கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தலாகும்.
- அனுபவமும் தகைமையும் மிக்க குருவிடமே தீட்சை பெறல் வேண்டும்.
- தீட்சை பல்வேறு வகைப்படும்.
- தீட்சை பெற்றவர்கள் மட்டுமே சைவ சமயிகளாகின்றனர்.

# 2. சைவ நாற்பாதங்கள்

பிறவித் துன்பம் நீங்கி பிறவாமையாகிய பேரின்பத்தை வேண்டி, இறைவனின் பாதங்களை அடைவதற்கு அனுசரிக்க வேண்டிய படிமுறைகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களைச் சைவ சமயம் கூறுகிறது. இவை முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்னும் நான்கு மார்க்கங்களாக அடியார்களால் அனுசரிக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம்...... என நான்காய் விரிவடைந்து பதினாறுபடிகளாய் அமையும். இப்படிகள் ஒவ்வொன்றும் உபாய மார்க்கம், உண்மை மார்க்கம் என இவ்விரண்டாக நோக்க முப்பத்திரண்டாகக் கொள்ளப்படுகிறது.
உபாய மார்க்கம் - உலக வாழ்வில் நின்றபடி இறையருளை வேண்டி ஏதாவது வழிமுறையைப் பின்பற்றி ஒழுகுதலாகும்.

உண்மை மார்க்கம் - உலகப்பற்றை மெல்ல மெல்ல விட்டவர்கள் அம்மார்க்கங்களிலேயே தமக்கேற்ற ஒரு வழியைப் பின்பற்றி இறையருளை நாடி நின்று வேறு பயன் கருதாது ஒழுகுதலாகும். இவ்வாறான மார்க்கங்களில் நின்று ஒழுகிய பெரியார் சரிதைகளைப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. இவற்றுக்கான நியதிகளையும் நியமங்களையும் சரித்திர நூல்கள் கூறுகின்றன.

## அ. சரியை

அன்பின் துணையோடு உடம்பினால் செய்யும் இறைபணிகள் அனைத்தும் சரியை நெறியாகும். இலகுவில் செய்யக்கூடிய ஆரம்ப முயற்சியான இதற்குத் தூய தெய்வ பக்தியில் இறையச்சமும் துணை நிற்க வேண்டும். திருநாவுக்கரசர், அப்பூதியடிகள், திருக்குறிப்புத்தொண்ட நாயனார், அதிபத்த நாயனார், கண்ணப்ப நாயனார், திருநாளைப் போவார் போன்றோர் இந்நெறியில் நின்று முத்தியடைந்தவர்கள் ஆவர். இந்நெறியில் நிற்போர் சிவனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் கொள்ளும் தாச மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவர்களாவர். தாச மார்க்கம் பற்றி திருமந்திரம் மேல்வருமாறு குறிப்பிடுகின்றது.

**எளிய நல் தீபம் இடல் மலர் கொய்தல்**
**அளியின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்**
**பளிபணி பற்றல் பன்மஞ்சனம் ஆதி**
**தளி தொழில் செய்வது தான் தாச மார்க்கமே.**

(எளிய - எளிதாக, பணிவாக; நல்தீபம் இடல் - விளக்கேற்றுதல்; அளியின் - அன்புடன்; தூர்த்தல் - குப்பை கூளங்களை கூட்டிக் வெளியே குவித்தல், அதாவது திருவலகிடுதலாம்; பளி - பள்ளி என்பதன் இடைக்குறை; பள்ளி - கோயில்; தளி - கோயில் )

சிவாலயத்தை அலகிடுதல், மெழுகுதல், கழுவுதல், பூஞ்சோலையமைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், பூமாலைகட்டுதல், பூசைத்திரவியம் கொடுத்தல், பூசைக்குரிய பொருட்களைத் துலக்கிச்சுத்தம் செய்தல், விளக்கிடல், தீவர்த்தி, குடை, கொடி பிடித்தல், வாகனம் காவுதல் முதலியன சரியைத் தொண்டுகளாகும். இந்நெறி நின்றோர் **சாலோக முத்தியையும்** சிவனின் உலகை அடைதலாகிய சிவலோகத்தையும் பெறுவர்.

## ஆ. கிரியை

மந்திர தந்திரங்களைக் குரு மூலமாக அறிந்து சமய, விசேட, நிர்வாண தீட்சைகளைப் பெற்றோர் மேற்கொள்ளும் வழிபாட்டு முறை கிரியையாகும். தம் பொருட்டு தம்மளவில் வழிபடும் ஆன்மார்த்த பூசையும், பிறர் பொருட்டு ஆலயங்களிலே செய்யப்படும் பரார்த்த பூசையும் இந்நெறியுள் அடங்கும். இந்நெறி நின்று சண்டேஸ்வரரும், திருஞானசம்பந்தரும் முத்தி பெற்றனர். இந்நெறி சிவனுக்கு அருகில் இருக்கும் சற்புத்திர மார்க்கமாகும். இந்நெறி நின்றோர் **சாமீபமுத்தியைப்** பெறுவர். சற்புத்திர மார்க்கம் பற்றி திருமந்திரம் மேல்வருமாறு குறிப்பிடுகிறது.

**பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட் டன்னமும் நீர்சுத்தி செய்தல் மற்(று)**
**ஆசற்ற சற்புத்திர மார்க்கமாகுமே.**

(பூசித்தல் - பூசை செய்தல்; வாசித்தல் - திருமுறை ஓதுதல்; அன்னம் நேசித்து இடல் - அன்னதானம் இடல்; நீர் சுத்தி செய்தல் - சுத்தி செய்தல்(திரவிய) மற்றும் பிற செயல்களாலும் கிரியையானது குற்றமற்ற சற்புத்திர மார்க்கம் ஆகின்றது.)

## இ. யோகம்

சரியை, கிரியை ஆகிய நெறிகளை விட மேலானதாக இந்நெறி சாத்திர நூல்களில் கூறப்படுகிறது. இதற்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்டாங்க யோக உறுப்புக்கள் உள்ளன. இவ்வட்டாங்க யோகங்களிலும் பயிற்சி பெற்று படிப்படியாகத் தேறியவாறே யோக நெறியை அனுசரிக்க முடியும். இதனை யோகியரிடம் பயின்ற திடசித்தமுடையவர்களே அனுட்டித்து ஈடேற முடியும்.

யோகியர், திருமூலர், பெருமிழைலைக்குறும்பர், சேரமான் பெருமாள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் இந்நெறியில் நின்றோராவர். இந்நெறி நட்பு மார்க்கமாக ஒழுக வேண்டியதால் இந்நெறி மூலம் **சாரூப முத்தியும்** சிவரூபம் பெறும் பாக்கியமும் பெறுவர். இச்சக மார்க்கம் பற்றி திருமந்திரம் மேல்வருமாறு குறிப்பிடுகிறது.

**யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்**
**யோகச் சமாதியின் உள்ளே உளர் ஒளி**
**யோகச் சமாதியின் உள்ளே உள சக்தி**
**யோகச் சமாதி உகந்தவர் சித்தரே.**

(அகலிடம் - பரந்த இடமாகிய உலகம்; உளர் ஒளி - சுடர் விட்டுப்பிரகாசிக்கும் ஒளி)

## ஈ. ஞானம்

ஞானமானது ஆன்மாவாகிய தன்னை சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது சிவனை உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை அறிவால் வழிபடுதலாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் நான்கு அங்கங்கள் இந்நெறிக்கு உண்டு. முன்னைய மூன்று நெறிகளிலும் நின்று பக்குவம் பெற்ற சாதகனை இறைவன் குரு வடிவிலே வந்து தீட்சை உபதேசம் செய்து ஞானத்தை அளித்து முத்தியை வழங்குவார்.

மாணிக்கவாசகர், மெய்கண்டார், ஆகியோருக்கு குரு உபதேசம் கிடைத்தமையும் அருணகிரிநாதருக்கு முருகனே குருவாய் வந்து உபதேசம்

செய்தமையும் ஞான நெறியின் சான்றுகளாகும். இந்நெறியில் நிற்பதன் மூலம் **சாயுச்சிய முத்தியும்** சிவமேயாகி ஒன்றுதலாகிய பாக்கியமும் கிட்டும். சிவமோடு ஒன்றியதனால் சன்மார்க்கமாகிறது. இச்சன்மார்க்கம் பற்றி திருமந்திரம் மேல்வருமாறு குறிப்பிடுகிறது.

**தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்ய**
**பரிசிக்க கீர்த்திக்கப் பாதுகம் சூடக்**
**குருபக்தி செய்யும் குவலயத்தோருக்குத்**
**தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கம் தானே**

(கீர்த்தித்தல் - புகழ் பாடல்; பாதுகம் - திருவடி; முத்திச்சார்பு - முத்தியாகிய சார்பு; அதாவது சிவத்தை சார்ந்திருக்கும் சார்பு)

முற்பிறவியின் தவப்பயனாய் இப்படிமுறைகளில் நின்று ஒழுகாமலேயே சிவனருளால் பூரண ஞான நிலை இளமையில் தோன்றி பிரகாசிப்பதும் உண்டு. மெய்கண்டார், திருஞானசம்பந்தர், கண்ணப்ப நாயனார் போன்றோர் இதற்குச் சான்றாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானமெனும் மார்க்கங்களைத் தம் வாழ்விற் வாழ்ந்து காட்டிய நாயன்மார்கள் பற்றி பெரியபுராணம் விரித்துரைக்கின்றது. சைவ சமயம் கூறும் அன்பு நெறியாக சைவ நாற்பாதங்கள் மிளிர்கின்றன. இவ்வகையான மார்க்கங்களைப் பின்பற்றுவதால் உலக இன்பங்களை அனுபவித்துப் பின் முத்தியடைதலாகிய பிறவிப்பயனையும் அடைய முடிகிறது. இந்நான்கு நெறிகளையும் பற்றித் தாயுமானவர்,

**விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும்**
**அரும்புமலர் காய்கனி போலன்றோ? பராபரமே!**

எனக் குறிப்பிடுகிறார்.

ஞானத்தை நாம் ஒரு கனிக்கு ஒப்பிடின் சரியை அரும்பு என்றும், கிரியை மலர் என்றும், யோகத்தை காய் என்றும் குறிப்பிடலாம்.

முத்தியில் நாட்டமுடையோர் இவற்றுள் எதனைப் பின்பற்றி ஒழுகினாலும் அது முடிவிலே ஞானத்துக்கு இட்டுச் சென்று இறைவனோடு கலத்தலாகிய பரமுத்தியையே நல்கி விடும்.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சரியைத் தொண்டுகளாவன யாவை?

2. மேல்வரும் மார்க்கங்களைச் சுருக்கமாக விளக்குக.
   அ. உண்மை மார்க்கம்
   ஆ. உபாய மார்க்கம்

3. கிரியை நெறிபற்றி திருமந்திரம் கூறும் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

மேல்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

| நெறி | ஒழுகிய சமய குரவர் | நின்ற மார்க்கம் | அடைந்த முத்தி நிலை | உவமிக்கும் நிலை |
|---|---|---|---|---|
| சரியை | | | | |
| கிரியை | | | | |
| யோகம் | | | | |
| ஞானம் | | | | |

## பாடச்சுருக்கம்

- சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன இறைவனை அடைவதற்காகப் பின்பற்றக்கூடிய பல்வேறு மார்க்கங்களாகும்.
- இதன் வாயிலாக அனுபவம் படிப்படியாக வளர்ச்சியடையும்.
- சமய குரவர்கள் இந்நெறியில் நின்று வாழ்ந்து காட்டிய உதாரண புருஷர்களாவர்.